# கூடுதல் மாவட்ட நீதிமன்றம், திண்டுக்கல்

அசல் வழக்கு எண்.14/2024

**பி.வா.சா.– 1**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | **திரு. வினோத்குமார்** | தொழில் | |
| த/க பெயர் | | மதம் | |
| கிராமம் | | வயது | |
| தாலுகா | | தேதி | 17.03.2026 |

1873ம் வருடத்திய சட்டம் பிரிவு 10ன்படி பிரமாணத்தின் பேரில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

**<u>முதல் விசாரணை</u>**

நான் இந்த வழக்கின் 2ஆம் பிரதிவாதி ஆவேன். நான் தாக்கல் செய்துள்ள பிரமாண பத்திரத்தை என் முதல் நிலை சாட்சியமாக ஏற்றுக்கொள்ள கேட்டுக்கொள்கிறேன்.

| வ.எண் | தேதி | ஆவணங்கள் விபரம் | தன்மை |
|---|---|---|---|
| பி.வா.சா.ஆ1 | 07.06.1999 | கச்சம நாயக்கரும், அவரது மகன் எல்லப்ப நாயக்கரும் சேர்ந்து எழுதிக்கொண்ட பாகப்பிரிவினை பத்திரம் | சான்றிட்ட நகல் |
| பி.வா.சா.ஆ2 | 07.06.1999 | கச்சம நாயக்கரும் 1ம் பிரதிவாதிக்கு எழுதிக்கொடுத்த செட்டில்மெண்ட் பத்திரம் | சான்றிட்ட நகல் |
| பி.வா.சா.ஆ3 | 28.08.2000 | எல்லப்ப நாயக்கரும், பெருமாள் சாமியும் சேர்ந்து எழுதிக்கொடுத்த கிரைய பத்திரம் | சான்றிட்ட நகல் |
| பி.வா.சா.ஆ4 | 09.11.2000 | எல்லப்ப நாயக்கர் சின்னச்சாமிக்கு எழுதிக்கொடுத்த கிரைய பத்திரம் | சான்றிட்ட நகல் |
| பி.வா.சா.ஆ5 | 11.02.2026 | பிரதிவாதிகள் பெயரில் உள்ள பட்டா எண்.563 | கணினி பதிவிறக்க நகல் |
| பி.வா.சா.ஆ6 | 11.02.2026 | 1ஆம் பிரதிவாதி பெயரில் உள்ள பட்டா எண்.4120 | கணினி பதிவிறக்க நகல் |
| பி.வா.சா.ஆ7 | 11.02.2026 | பிரதிவாதிகள் மற்றும் பொன்னுச்சாமி பெயரில் உள்ள பட்டா எண்.192 | கணினி பதிவிறக்க நகல் |
| பி.வா.சா.ஆ8 | 11.02.2026 | 1ஆம் பிரதிவாதி பெயரில் உள்ள பட்டா எண்.165 | கணினி பதிவிறக்க நகல் |

| | | | |
|---|---|---|---|
| பி.வா.சா.ஆ9 | 11.02.2026 | பிரதிவாதிகள் மற்றும் பிற நபர்கள் பெயரில் உள்ள கூட்டுப்பட்டா எண்.2431 | கணினி பதிவிறக்க நகல் |
| பி.வா.சா.ஆ10 | 11.02.2026 | 1435 வருடத்திய பசலி சாகுபடி அடங்கல் | உண்மை நகல் |
| பி.வா.சா.ஆ11 | 17.02.2026 | 1435 பசலிக்கான வரி ரசீது 4 வரிசை | அசல் |
| பி.வா.சா.ஆ12 | 30.08.2025 | வீட்டு வரி ரசீது | அசல் |
| பி.வா.சா.ஆ13 | 14.11.2025 | மின் கட்டண ரசீது 6 வரிகை | அசல் |
| பி.வா.சா.ஆ14 | | எனது பெயரிலான ஆதார் அட்டை | நகல் |

<u>**வாதி தரப்பில் குறுக்கு விசாரணை :–**</u>

நான் இந்த வழக்கில் 2ஆம் பிரதிவாதி, 1ஆம் பிரதிவாதி என் தாயார் வாதிகள் என் தாயாரின் சகோதரிகள். நான் சின்னச்சாமியின் மகன் ஆவேன். வழக்கு சொத்தின் விஸ்தீரனம் 25 ஏக்கர் 48 செண்டு என்றால் சரிதான். தானசெட்டில்மெண்ட் வா.சா.ஆ.3. /பி.வா.சா.ஆ4 மற்றும் கிரைய ஆவணம் வா.சா.ஆ.5,/பி.வா.சா.ஆ.2. மூலமாக மொத்தமாக 12 ஏக்கர் 90 செண்ட் எனது அப்பாவிற்கும், அம்மாவிற்கும் கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.5,/ பி.வா.சா.ஆ.4 ன் படி மீதமுள்ள 12 ஏக்கர் 58 செண்ட்டை என் அப்பாவோ, அம்மாவோ கச்சமநாயக்கரிடமிருந்து எழுதி வாங்கவில்லை என்றால் மேற்படி 12 ஏக்கர் 90 செண்ட்தான் தானசெட்டில்மெண்ட் மூலமாக வந்துள்ளது, 12 ஏக்கர் 58 இந்த ஆவணம் மூலமாக என் அப்பாவுக்கோ,அம்மாவுக்கோ வரவில்லை. எல்லப்பநாயக்கரான எனது தாத்தா இறந்த பிறகு 25 ஏக்கர் 48 செண்ட்டை என் அம்மா பெயருக்கு பட்டா வாங்கி கொண்டோம் என்றால் சரிதான். அந்த பட்டாவை போலியாக பெறப்பட்டுள்ளது என ஆட்சேபணை செய்து அந்த ஆட்சேபணையை வா.சா.ஆ.9ஆக தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் ஆட்சேபணை தாக்கல் செய்யப்பட்டுள்ளது, பட்டா முறையாகத்தான் பெற்றுள்ளோம். அதன்பிறகு வாதிகள் தங்களுக்கு பாகம் உள்ளது வா.சா.ஆ.7ன் படி அறிவிப்பு அனுப்பினார்கள் என்றால் சரிதான். வாதிகளுக்குரிய பாகத்தை மறைத்து நான் ஆவணங்களை தாக்கல் செய்துள்ளதால் தாவாப்படி தீர்ப்பாக வேண்டும் என்றால் சரியல்ல. வாதிகளின் பாகத்தை மறைத்து மோசடியாக ஆவணங்களை உற்பத்தி செய்து எதிர்வாதம் செய்கிறேன் என்றால் சரியல்ல.

<u>**மறு விசாரணை –இல்லை.**</u>

/ஒப்பம்/

XXXXXXX

Taken down by me in open court read over to the witness, admitted by him to be correct this contains a full and true account of the statement Made by the witness.

SWARNAM J RAJAGOPALAN

Digitally signed by SWARNAM J RAJAGOPALAN
Date: 2026.03.17 21:40:53 +0530

Additional District and Sessions Judge,

Dindigul.